**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 16.07.2025**
**OS. No. 23/2018**
**வழக்கு சாட்சி DW.1–சிவசாமி, த/பெ.பரமசிவம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

6) அப்புசாமி என்பவர் என் தாத்தா என்றால் சரிதான். அவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து 9.65 ஏக்கர் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை அவரது வாரிசுகளுக்கு பாகபிரிவினை செய்து வைத்து அவரவர் சொத்தை அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் பெரியப்பா லிங்குசாமி அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தை வேறு நபருக்கு விற்றுவிட்டார் என்றால் எங்களுக்கு சில பாக நிலத்தையும், வேறு நபர்களுக்கு சில பாகத்தையும் விற்றுள்ளார். அப்புசாமியின் மற்றொரு மகன் மயில்சாமி அவருடைய பாகத்தையும் வேறு நபர்களுக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

7) என் தந்தை பரமசிவமும், அவரது வாரிசுகளும் 09.03.2000 ல் வாதியின் தாயார் பொன்னிக்கு 93 சென்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் சக்குபந்தியாக கூணாண்டியூர் ரோட்டிலிருந்து பரமசிவம் மற்றும் உமது கணவர் சிவசாமி நிலங்களின் வழியாக செல்லும் கால்தடவழியில் ஆடுகள் மற்றும் ஆட்கள் போகவர உள்ள தடவழி சகிதமும் சேர்ந்து கிரையத்திற்கு சம்மந்தப்பட்டது என குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் முனுசாமி, லிங்குசாமி, மயில்சாமி ஆகியோர்களை சேர்க்கவில்லை என்று நான் சொல்லியுள்ளேன் என்றும், அவர்கள் ஏற்கனவே அவரவர்கள் சொத்துக்களை விற்றுவிட்டதால் அவர்களை சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா தடவழியை நாங்கள் தான் தடுத்து இடையூறு ஏற்படுத்தினேன் என்றும், வாதி எதுவும் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) ச.எண்.194 க்கும் மற்ற இதர நிலங்களுக்கும் கிழக்குபுறமாக மேச்சேரி – கீரைக்கரைனூர் செல்லும் தார்ரோட்டிற்கு தெற்கு புறமாக உள்ள தாவா சொத்தில் ச.ண்.A4 ல் குருசாமியின் பாக பூமியின் வழியாக சென்ற பாதையும், தற்போது பச்சியண்ணன், தேவன் பாகபூமியின் வழியாக செல்லும் வண்டிப்பாத்தியத்தையும் வாதியும், அவரது குடும்பதினரும் பயன்படுத்தி வருகிறார்கள் என நான் சொல்வதற்கு அவர்கள் எப்போதிலிருந்து பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் தற்போதிலிருந்து சுமார் 2 வருடங்களுக்கு முன்பிலிருந்து பயன்படுத்தி வருகிறார்கள்.

9) பி.வா.சா.ஆ.1 ஆவணமானது 03.01.2023 ம் தேதியில் வாதியின் தந்தை சிவசாமி என்பவர் தேவன் என்பவரிடம் தடவழியை கிரையமாக இடத்திற்கு இடம் பரிவர்த்தனை மூலம் மாற்றிக்கொண்டனர் என்றும் அது அதற்கான ஆவணம் என்றால் சரியல்ல. காலம் காலமாக பயன்படுத்தி வந்தது தான் இந்த தாவா பாதை என்றால் சரியல்ல. தாவா பாதையில் நாங்கள் தான் கல், மண் ஆகியவற்றை கொட்டி பிரச்சனை செய்ததால் மேச்சேரி காவல் நிலையத்தில் வாதி புகார் அளித்தார் என்றும், அந்த புகாரின் பேரில் இது சிவில் வழக்கு என்று காவல் நிலையத்தில் தெரிவித்துவிட்டதால், எங்கள் மீது இந்த வழக்கு தாக்கல் செய்து, இ.ம.எண்.161/2018 ல் தாவா பாதையில் இந்த வழக்கு முடியும் வரை தடை செய்யக்கூடாது என்று கடந்த 23.11.2018 அன்று உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல.

10) வாதியின் தாயார் 2013 ம் வருடத்தில் வாதியின் பெயரில் தானசெட்டில்மெண்ட செய்து வைத்துவிட்டார் என்றும், அதன் அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் அவர் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் தாவா வழியை தவிர அவருக்கு வேறு வழி இல்லை என்றும், அதனால் வாதி கோரியவாறு வழக்கு தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.